**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – 2022–2023 – மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் 235 இல்லங்கள், சிறப்புப் பள்ளிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் உணவூட்டு மானியம் ரூ.900/–லிருந்து ரூ.1,200/– ஆக உயர்த்தி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந–1. 2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 15

நாள்: 28 .06.2022
சுபகிருது, ஆனி – 14
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 38, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந–1) துறை, 25.10.2018.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 4842/சி.ப.2/2021, நாள் 22.04.2022.

-----

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2022–2023ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது இன்ன பிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> "மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு, அரசு உதவி பெறும் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் 235 இல்லங்கள், சிறப்புப் பள்ளிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் உணவூட்டு மானியம் ரூ.900/–லிருந்து ரூ.1200/–ஆக உயர்த்தி ரூ.3.92 கோடி கூடுதல் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்."

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்பட்டுவரும், 287 சிறப்புப் பள்ளிகள் மற்றும் இல்லங்கள் மூலம் பயனடைந்துவரும் 11,272 மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு மாதமொன்றிற்கு வழங்கப்பட்டுவரும் உணவூட்டு மானியம் ரூ.650/–லிருந்து ரூ.900/–ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்கீழ் இயங்கும் அரசு சிறப்புப்பள்ளிகள் / அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகள் / மறுவாழ்வு இல்லங்கள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் தங்கி உள்ள மனநலம் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி

(த.பி.பா.)

குன்றியோர்கள் என ஆக மொத்தம் 12018 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைவர் என்றும் இப்பயனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியம் ரூ.900/- லிருந்து ரூ.1200/- ஆக உயர்த்துவதால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.3,92,04,000/- ஆகும் (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) என்றும் எனவே, இக்கூடுதல் செலவினத் தொகையினை மேற்காணும் சிறப்புப்பள்ளி, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இல்லங்களுக்கான தலைப்புகளின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு சிறப்புப்பள்ளிகள் / அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகள் / மறுவாழ்வு இல்லங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் தங்கி உள்ள மனநலம் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி குன்றியோர்கள் என ஆக மொத்தம் 12018 பயனாளிகள் பயனடையும் விதமாக, உணவூட்டு மானியம் ரூ.900/- லிருந்து ரூ.1200/- ஆக உயர்த்தி வழங்கியும், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் நடப்பாண்டுக்கு ரூ.2,94,03,000/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து மூவாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

| வ. எண் | கணக்குத் தலைப்பு | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் மாநிலச் செலவினங்கள் - AR - காதுகேளாதோர் பள்ளிகள் - 367 உணவளிக்கும் / உணவுச் செலவினம் - 09 - ஏனையவை.<br>(IFHRMS DPC : 2235 02 101 AR 367 09) | 11,36,250 |
| 2. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - AA - பார்வையற்றோர் பள்ளி - 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் - 09 - ஏனையவை.<br>(IFHRMS DPC : 2235 02 101 AA 367 09) | 10,75,500 |
| 3. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - BE - கை, கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் - 09 - ஏனையவை.<br>(IFHRMS DPC : 2235 02 101 BE 367 09) | 40,500 |
| 4. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 102 - குழந்தைகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - AZ - மனவளர்ச்சி குன்றியோர் நல நிலையம் தொடங்குதல் - 367 - உணவளிக்கும் / உணவுச் செலவுகள் - 09 - ஏனையவை.<br>(IFHRMS DPC : 2235 02 102 AZ 367 09) | 1,17,000 |

| | | |
|---|---|---|
| 5. | 2235 சமூகப் பாதுகாப்பும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - MG - மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி - 309 உதவித்தொகை - 01 - நடப்பு செலவுக்கான உதவித்தொகை (IFHRMS DPC : 2235 02 101 MG 309 01) | 1,07,66,250 |
| 6. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - CE - மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு நிதியுதவி - 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் - 09 - ஏனையவை. (IFHRMS DPC : 2235 02 101 CE 367 09) | 60,84,000 |
| 7. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - MO - மனநோயால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான - 309 உதவித்தொகை - 03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (IFHRMS DPC : 2235 02 101 MO 309 03) | 71,55,000 |
| 8. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - DL - மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய பராமரிப்பு இல்லங்கள் - 309 உதவித்தொகை - 01 - செலவுக்கான உதவித்தொகை (IFHRMS DPC : 2235 02 101 DL 309 01) | 24,84,000 |
| 9. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - CU - மனவளர்ச்சி குன்றிய வயதான மகளிருக்காக மறுவாழ்வு இல்லங்களைத் தொடங்குதல் - 309 உதவித்தொகை - 03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (IFHRMS DPC : 2235 02 101 CU 309 03) | 4,32,000 |
| 10. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் - 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - CF - மனவளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கான பள்ளிகளை நடத்தும் அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி - 309 உதவித்தொகை - 01 நடப்பு செலவு உதவித்தொகை (IFHRMS DPC : 2235 02 101 CF 309 01) | 1,12,500 |
| | மொத்தம் | 2,94,03,000 |

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2,94,03,000/- 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு

செல்லப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்க குறிப்பினையும் மற்றும் 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (சந/வ.செ.பொது.1) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளி நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.30683/நிதி(சந)/2022, நாள்.27.06.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.0487 (நானூற்று எண்பத்து ஏழு).

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிக்ள் நல அலுவலர்கள்.
(வழி) மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொது.I/வ.வ.I)துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 30/06/22
30/6/22